[1980 ஜூலை 31]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் நேராக வேளாங்கன்னிக்கு வருகிறார்கள். அப்படி வருகின்றவர்களுக்கு அங்கே தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே, அங்கே அந்தப் பயணிகள் தங்கக்கூடிய அளவிலே ஒரு சுற்றுலா பயணிகள் விடுதி கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக்கேள்வி போட்டால் தகவல் தர முடியும்.

மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகே உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

* வினா எண் 82—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம் மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் வேலை முடிநது விட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): கட்டிட வேலை முடிவடைந்துள்ளது. இந்த புது கட்டிடத்தில் வகுப்புகள் ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து நடத்தப் பெற இருக்கின்றன.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலியில் உயர்நிலைப்பள்ளி 64ஆம் ஆண்டு முதல் தனியார் கட்டிடத்தில் இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்தவர் மணலி கந்தசாமி இறக்கின்றபோது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட நேரத்தில் பொது மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க மணலியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்ததற்காக அந்த மக்கள் சார்பில் நன்றி சொல்வதோடு, இப்போது கட்டியிருக்கக்கூடிய கட்டிடத்தில் 4 வகுப்புகளே நடத்தலாம் என்றாலும், மீதியுள்ள வகுப்புகளுக்கு இடமில்லை. மாவட்ட கல்வி அதிகாரியாக இருக்கிறவர் அதை காலி செய்யவேண்டும் என்று சொல்வதாக அறிகிறேன். அப்படி இருக்கக்கூடிய முறையிலே, பாக்கியுள்ள பகுதியில் துரிதமாக கட்டிடத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கட்டப்படுகின்ற கட்டிடம் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிசம்பர் 1978-லே அனுமதிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் 1979—80லே துவங்கப்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நிரந்தர மில்லாத இடத்தில் இருப்பதால், ஆகஸ்ட் 21ஆம் தேதி காலி செய்யவேண்டும். தற்சமயம் உள்ள கட்டிடத்தில் 4 வகுப்புகள் தான் நடத்த முடியும். மீதியுள்ள வகுப்புகளுக்கு இடம் கிடையாது. எனவே, டெம்பரரி ஷெட்டுகள் அமைப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அந்த வகையிலே அங்கே வகுப்புகள் துவங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

வடாற்காடு மாவட்டத்தில் மதிய உணவு வினியோகம்

* வினா எண் 83—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவை எடுத்துச் செல்ல எத்தனை ஒன்றியங்களில் வேன்கள் உடயோகப்படுத்தப் படுகின்றன?

(ஆ) அவைகள் போதுமானதாக உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 36

(ஆ) ஆம்.

[முற்பகல் 9·30]

திரு. பெ. சு. திருவேங்கடம்: ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கூடங்களில் வான்கள் மூலமாக துவக்கப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. அடிக்கடி வான்கள் பழுதடைந்து மாதக் கணக்கில் பழுது பார்க்காமலே நிறுத்திவிடுகிறார்கள். சைக்கிள்களில் மாட்டு வண்டிகளில் எடுத்துச் செல்வதன் காரணமாக உணவு தரமாக இல்லாமல் குழந்தைகள் உடல் நலம் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்க அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?